සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Tamil

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 8	**தமிழ்மொழியும் இலக்கியமும்**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. மன்னா! உனது பெருமையையும் வள்ளன்மையையும் கேள்வியுற்று வந்தேன். – 'வள்ளன்மை' என்பதன் பொருள்.
1. ஈகை 2. அழகு 3. புகழ் 4. அறிவு

02. நான் இவரது முன்மொழிவுக்கு உடன்பட்டு வழி மொழிகின்றேன். இங்கு வழிமொழிதல் என்பதன் கருத்து.
1. வழி காட்டுதல் 2. அனுசரித்துக் கூறுதல்
3. முதலில் எடுத்துக் கூறுதல் 4. மறுத்துக் கூறுதல்.

03. தமிழ் நாட்டில் புதுமை செய்த ஞானகவி இதில் - புதுமை என்பதன் எதிர்ச் சொல்.
1. நவீனம் 2. சிறுமை 3. பெருமை 4. பழைமை

04. மயூரன் உன்னுடைய சிநேகிதன் தானே! சிநேகிதன் என்பதன் எதிர்ப்பாற்சொல்.
1. சிநேதி 2. சிநேகிதி 3. சிநேகன் 4. சிநேகிச்சி

05. பின்வருவனவற்றுள் பொருளால் வேறுபட்ட சொல் எது?
1. கடல் 2. பரவை 3. வேலை 4. பணி

06. நெல்லுக்கு நாற்று எனப்படுவது போல பருந்துக்கு.
1. பார்ப்பு 2. பறள் 3. போதகம் 4. பிள்ளை

07. டெலஸ்கோப் - Telescop மூலம் சந்திர கிரகணத்தை பார்த்தோம் - டெலஸ்கோப் என்பதன் தமிழ்க் கலைச் சொல்.
1. தொலை நகல் 2. தொலைபேசி
3. தொலை நோக்கி 4. தொலைக்காட்சி

08. ஐயகோ அவலம் நேர்ந்ததே - இவ்வாக்கியத்தில் இடம்பெறவேண்டிய நிறுத்தக் குறிகள் முறையே.
1. காற்புள்ளி, மெய்ப்பாட்டுக்குறி 2. மெய்ப்பாட்டுக்குறி, முற்றுப்புள்ளி
3. முற்றுப்புள்ளி, மெய்ப்பாட்டுக்குறி 4. காற்புள்ளி, முற்றுப்புள்ளி

09. காத்திருந்து ஏமாறுதல் - என்ற பொருள் தரும் உவமைத் தொடர்.
1. வேலி பயிரை மேய்ந்தாற் போல் 2. கொழு கொம்பற்ற கொடி போல
3. இலவு காத்த கிளி போல 4. விளக்கொடு விளையாடும் விட்டில் போல

Past Papers Wiki

10. அடிக்கடி தடைப்படும் மின்சாரத்தினால் மக்கள் சிரமப்படுகின்றனர். இதில் இடம்பெற்ற வினையடை.
    1. அடிக்கடி
    2. தடைப்படும்
    3. மின்சாரம்
    4. சிரமப்படுகின்றனர்.

11. பின்வருவனவற்றுள் இரட்டைக் கிளவியாக அமைந்த தொடர்.
    1. பலபல
    2. விடுவிடு
    3. அணுஅணு
    4. கசகச

12. பருந்துக்கு இரண்டு கண்கள் உண்டு. இவ்வாக்கியத்தில் இடம்பெற்ற பெயர்ச் சொற்கள்.
    1. பொருள், இடம், காலம்
    2. பொருள், குணம், சினை
    3. பொருள், சினை, தொழில்
    4. பொருள், இடம், சினை

13. பின்வருவனவற்றுள் முற்று வினையாகவும் எச்ச வினையாகவும் வந்த சொல் எது?
    1. ஓடும்
    2. ஓடிய
    3. ஓடுக
    4. ஓடினான்

14. "பொருளால் பெயர்ந்த நீர், நிறைக்குப் பொருந்தும்" எனும் விதி கண்டான் - இவ்வாக்கியத்தின் 'விதி' என்ற உறுப்பு.
    1. எழுவாய்
    2. பயனிலை
    3. செயற்படுபொருள்
    4. அடைமொழி

15. கடந்த சில மாதங்களாக மழை பெய்யவில்லை ..... நாடு வரட்சி அடையவில்லை. இவ்விடைவெளிக்குப் பொருத்தமற்ற இணைப்பிடைச் சொல்.
    1. ஆகவே
    2. ஆனாலும்
    3. எனினும்
    4. இருந்தபோதும்

16. பின்வருவனவற்றுள் உவமையாக வந்த தொடர்.
    1. பல்முத்து
    2. அறிவுக்கடல்
    3. கோபத்தீ
    4. மதிமுகம்

17. 'போலி நியாயம்' என்ற கருத்தைத் தரும் பழமொழி.
    1. இக்கரை மாட்டுக்கு அக்கரைபச்சை
    2. வேலைக் கள்ளிக்கு பிள்ளை சாட்டு
    3. ஆறிலும் சாவு நூறிலும் சாவு
    4. துள்ளின மாடு பொதி சுமக்கும்

18. கிரந்த எழுத்து இடம்பெறக் கூடிய சொல்.
    1. அ.்றிணை
    2. உபகாரம்
    3. வருடம்
    4. காரணம்

19. கடல் + அலை என்பது.
    1. உயிர் முன் உயிர் புணர்தல்
    2. உயிர் முன் மெய் புணர்தல்
    3. மெய்ம்முன் உயிர் புணர்தல்
    4. மெய்ம்முன் மெய் புணர்தல்

20. அவளுடைய வாழ்வில் கஷ்டம் ஏற்பட்டதற்கு மணிமேகலை,
    1. பொறுப்பல்ல
    2. பொறுப்பன்று
    3. பொறுப்பல்லர்
    4. பொறுப்பல்லள்

(2x20=40 புள்ளிகள்)

பகுதி – II

- முதலாம் இரண்டாம் வினா உட்பட எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

01. பின்வரும் தலைப்புக்களில் ஒன்றினைத் தெரிவு செய்து 150 சொற்களில் கட்டுரை எழுதுக.
    1. நீர் வளம் காப்போம்.
    2. நான் கண்ட விநோதக் கனவு
    3. நான் உலக செல்வந்தனானால்
    4. வாழை மரத்தின் சுயசரிதை

(20 புள்ளிகள்)

02. 'மரம் வளர்த்துப் பயன் பெறுவோம்.' என்ற தலைப்பில், மரங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தி 75 சொற்களில் துண்டுப் பிரசுரம் ஒன்றை எழுதுக.

(10 புள்ளிகள்)

03. பாடநூலை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
    1. தேன் மக்களால் போற்றப்படுவதற்குக் காரணம் யாது?
    2. "உமது வறுமை வெயிலவனைக் கண்ட பனி போல நீங்கும்; தயவு செய்து அங்கே போம்"
       அ. இக்கூற்று யாரால் கூறப்பட்டது?
       ஆ. "அங்கே" என்பது எதனைக் குறிக்கிறது?
    3. திருக்குறளில், மழை பற்றிப் பேசும் அதிகாரம் எது?
    4. 'யாகாவார் ஆயினும் நாகாக்க – என்ற வரியின் பொருளை எழுதுக.
    5. நாட்டார் பாடல்களின் வேறு பெயர்கள் இரண்டைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

04. பின்வரும் சொற்களின் கருத்துப் புலப்படுமாறு வாக்கியம் அமைக்க.
    1. மகுடம்
    2. கைம்மாறு
    3. பஞ்சம்
    4. பட்டாளம்
    5. குணதிசை

(10 புள்ளிகள்)

05. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.
    1. வரவேற்புரையில் இடம் பெறும் பகுதிகள் யாவை?
    2. அறிக்கை எழுதப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு குறிப்பிடுக.
    3. விளம்பரம் செய்யப்படுவதற்கான நோக்கங்கள் இரண்டு தருக.
    4. அழைப்பிதழ்களின் பிரதான இரு வகைகளும் எவை?
    5. கடித உறுப்புக்களைக் குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

06. பின்வரும் வினாக்களுக்கான விடைகளை எழுதுக.
    1. 'கை கலத்தல்' என்ற மரபுத் தொடரின் பொருள் யாது?
    2. "இடுப்பொடிஞ்சி நிக்கயில" என்ற பேச்சு வழக்கை எழுத்து வழக்கில் எழுதுக.
    3. "நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்" இவ்வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமையையும் அதன் பொருளையும் குறிப்பிடுக.
    4. ப், வ் என்ற இடைநிலைகளைப் பெற்று எதிர்காலம் காட்டும் வினை முற்றுக்கள் இரண்டு எழுதுக.
    5. 'அன்பறிவாண்மை' என்ற தொடரைப் பிரித்து எழுதுக.

(10 புள்ளிகள்)

07. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சோலையில் பறவைகள் சோம்பலை உதறியே
சுறு சுறுப்பாவதைப் பார்
காலையில் உலகினை கதிரொளி எழுப்பிடும்
கடமையை கண்டு கொள்வாய்

வேலையின் அலைகளில் விரிகதிர் ஒளிசெயும்
வியத்தகு பொன்னிறம் காண்
பாலையில் கானகப் பரப்பினில் வெயில் தரல்
பகலவன் நோக்கம் ஒன்றே

சாலையில் இயங்கிடும் சந்தடி அரவமும்
சாற்றிடும் காலை என்றே
காலையின் ஆட்சியில் கண்டிடும் காட்சிகள்
கலை என மகிழ்வு சேர்க்கும்

1. இப்பாடலில் கூறப்படும் பொழுது என்ன?
2. அப்பொழுதை எடுத்துக் காட்டும் அம்சங்கள் இரண்டைத் தருக.
3. பகலவனின் நோக்கம் யாது?
4. இங்கு 'வேலையின் அலைகள்' எனக் குறிப்பிடப்படுவது என்ன?
5. பின்வரும் சொற்களின் ஒத்த கருத்தை எழுதுக.
   1. அரவம் -
   2. சோலை –

(10 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாந் தவணைப் பரீட்சை –2025

பாடம் தமிழ்மொழியும் இலக்கியமும்

விடைப்பத்திரம்

Tami தரம் - 08

பகுதி I

01. 1	06. 1	11. 4	16. 4
02. 2	07. 3	12. 2	17. 2
03. 4	08. 2	13. 1	18. 3
04. 2	09. 3	14. 3	19. 3
05. 4	10. 1	15. 1	20. 4

(2x20=40 புள்ளிகள்)

பகுதி II

01. கட்டுரைப் புள்ளித்திட்டம்

பொருள் பொருத்தம்	-	09
கட்டுரை நுட்பம்	-	06
மொழிச் செம்மை	-	04
சொல் எண்ணிக்கை	-	01
		20 புள்ளிகள்

02. துண்டுப் பிரசுரம்

அமைப்பு	-	03
(விளிப்பு, கவர்ச்சியான தலைப்பு + வெளியிடுபவர் விபரம் + திகதி)		
விடயம்	-	06
மொழிநடை	-	01
		10 புள்ளிகள்

03. 1. தேன் சேர்க்கும் ஆசை
2. அ. பெருஞ்சித்திரனாரால்
ஆ. முதிரநகர் / முதிர் நாடு
3. வான் சிறப்பு
4. எதைக் காக்கா விட்டாலும் நாவைக் காத்துக் கொள்க.
5. வாய்மொழிப் பாடல், நாடோடிப் பாடல், கிராமியப் பாடல், மக்கள் கவிதை (10 புள்ளிகள்)

04. பொருள் புலப்பட வாக்கிய இயைபுடன் எழுதும் திறனுக்கேற்ப புள்ளி வழங்கவும். (10 புள்ளிகள்)

05. 1. விளிப்பு, வரவேற்றல், முடிப்பு
2. 1. கூட்டம் பற்றிய அறிக்கை.
2. செய்தியறிக்கை
3. நிதி அறிக்கை (பொருத்தமான விடயம்)
3. 1. விற்பனையை அதிகரித்தல்.
2. நுகர்வு நாட்டத்தை அதிகரித்தல்.
3. தகவல்களை வழங்குதல்.
4. 1. குடும்பம் சார் அழைப்பிதழ்
2. நிறுவனம் சார் அழைப்பிதழ்

5. முகவரியும் திகதியும்
விளிப்பு
விடயம்
முடிப்பு
ஒப்பம் (10 புள்ளிகள்)

06. 1. சண்டையிடுதல்
2. இடுப்பு ஒடிந்து நிற்கையிலே
3. 2ம் வேற்றுமை (செயற்படுபொருள்) ஆக்கல்
4. உண்பான் - ப்
செய்வான் - வ்
பொருத்தமான ஏதாவது உதாரணங்கள்
5. அன்பு+அறிவு+ஆண்மை (10 புள்ளிகள்)

07. 1. காலைப் பொழுது
2. 1. சோலைப் பறவைகள் சுறுசுறுப்பாகுதல்
2. கதிரொளி உலகினை எழுப்புதல்
3. சாலையில் சந்தடி, அரவம் கேட்டல்
3. பாலை, காடு போன்ற இடங்களில் வெயில் பரப்புதல்.
4. கடலலைகள்
5. 1. அரவம் - சத்தம்
2. சோலை - பூங்கா (10 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank